சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 10.09.2019

# சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, விகாரி வருடம் ஆவணி மாதம் 13–ம் நாள் (செப்டம்பர் திங்கள் 10–ம் நாள்:– 10.09.2019) செவ்வாய் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

## பொருள் எண்.01

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு –A, பிளாக்–3, நகரளவு எண்கள் 33/2, 33/12, 33/14 மற்றும் 33/15ல் கட்டுப்பட்டு 3.49 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வேண்டி திரு.P.ராஜேந்திரன் த/பெ.E.பழனிச்சாமி என்பவர் விண்ணப்பத்திருந்தார். விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க தொழில்நுட்ப ஒப்புதல் வேண்டி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1589/2019/எப்1, நாள்.07.05.2019ன்படி பரிந்துரை செய்ததில், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.2488/2019/மம3, நாள்.19.07.2019ன்படி தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

மேலும் மேற்காணும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி மனுதாரரால் பின்வரும் விவரப்படியான இடஙகள் சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் மூலம் மேதகு ஆளுநர் அவர்கள் பத்திர பதிவு ஆவணம் எண்.4274, நாள்.30.08.2019ன்படி தானமாக வழஙகப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் 1). கிழமேலாக உத்தேச சாலை, தென்புறம் வடபுறம் கிழமேல் மீட்டர் 115.60. 2).கிழமேலாக உத்தேச சாலை, தென்புறம் கிழமேல் மீட்டர் 109.90 3).கிழமேல் உத்தேச சாலை, தென்புறம் கிழமேல் மீட்டர் 105.10 வடபுறம் கிழமேல் மீட்டர் 105.45 4).தென்வடல் உத்தேச சாலை தென்புறம் வடபுரம் மீட்டர் 7.20 கீழ்புறம் தென்வடல் மீட்டர் 111.45 மேல்புரம் தென்வடல் மீட்டர் 93.30. 5).பூஙகாவிற்கான 217.65 ச.மீ காலியிடம் 6). 361.72 ச.மீ அளவுள்ள பூஙகா காலியிடம், 7).499.44 ச.மீ அளவுள்ள பூஙகா காலியிடம் 8).உள்ளாட்சி உபயோக 57.96 ச.மீ பரப்பளவு இடம் 9).தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழக உபயோக 57.96 ச.மீ பரப்பளவு உள்ள இடஙகள் நகராட்சிக்கு தானமாக கொடுக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **தானமாக கொடுத்துள்ள இடஙகளை மன்றம் ஏற்கலாம்.**
2. **மனுதாரரால் உரிய சாலை மற்றும் சாலையின் இரண்டு பக்கஙகளிலும் வடிகால் போன்றவை அமைத்து பணிகள் முடிக்கப்பட்டவுடன் இறுதி ஒப்புதல் கோரி பரிந்துரை செய்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1589/2019/எப்1)**

**தீர்மான எண், நாள்** 689, நாள்.10.09.2019

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.02

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியற்ற முறையில் கட்டப்படும் கட்டிடஙகளுக்கு அறிவிப்புகள் வழஙகுவதற்கு உரிய பிரத்யேக நோட்டீஸ்கள் அவசர அவசியம் கருதி உள்ளூர் அச்சகத்தில் 100 சீட் கொண்ட அட்டை 60 எண்ணம் அச்சிடப்பட்ட வகையில் ஆன செலவினம் ரூ.10350/– ஆனது இந்நகராட்சியின் இளநிலை உதவியாளர் பா.வசந்த் அவர்களால் செலவிடப்பட்டுள்ளது. அன்னாருக்கு மேற்காணும் செலவினத் தொகையினை வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.3403/2019/எப்1)**

**தீர்மான எண், நாள்** 690, நாள்.10.09.2019

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.03**

இந்நகராட்சியின் கீழ் இயங்கும் நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியராகப் பணிபுரியும் திருமதி.எம்.ராணி என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக ராஜபாளையம் நகராட்சிக்கு பணியிட மாறுதல் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

எனவே திருமதி.எம்.ராணி, செவிலியர், ராஜபாளையம் நகராட்சிக்கு பணியிட மாறுதல் வேண்டி சமர்ப்பித்த விண்ணப்பம் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. **குடும்ப சூழ்நிலை காரணமாக ராஜபாளையம் நகராட்சிக்கு மாறுதல் வேண்டியுள்ள திருமதி.எம்.ராணி செவிலியரின் விண்ணப்பத்தின் மீது உரிய நடவடிக்கை வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப தீர்மானிக்கலாம். (ந.க.எண்.4343/2014/சி1)**

**தீர்மான எண், நாள்** **691, நாள்.10.09.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.04**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோக நிதியின் வரவினைக்காட்டிலும், செலவு மிகவும் கூடுதலாக உள்ளதால், மேற்படி செலவினை ஓரளவு நிவர்த்திக்கும் பொருட்டு, குடிநீர் விநியோக உபவிதிகளை புதிதாக (சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரையின்) தயார் செய்து, கட்டண விகிதங்களை மாற்றி அமைக்கும் (10 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால்) பொருட்டு, உபவிதிகள் தயார் செய்யப்பட்டு, மேற்படி உபவிதிகளுக்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் 30.04.2019 ஆம் நாளிட்ட ந.க.12404/2017/குவ2 எண் செயல்முறைகளில் பொது அங்கீகாரம் (General Approval) பெறப்பட்டது. மேற்படி பொது அங்கீகாரத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி, குடிநீர் விநியோக கட்டண விகிதங்களை மாற்றியமைத்த விவரத்தினை ஏதாவது ஒரு தமிழ் மற்றும் ஆஙகில நாளிதழ்களில் விளம்பரப்படுத்தி, பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் (Objection and Suggestions) பெற அறிவுறுத்தியதைத் தொடர்ந்து தேனி, செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் வழியாக Trinity Mirror என்ற ஆஙகில நாளிதழிலும், தினபூமி தமிழ் நாளிதழிலும் விளம்பரம் வெளியிடப்பட்டு, விளம்பரம் வெளியான 15 தினஙகளுக்குள், ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தெரிவிக்க அறிவிப்பு செய்யப்பட்டன. மேற்படி விளம்பர அறிவிப்புகள் 22.08.2019ம் தேதி அன்று வெளியிடப்பட்டன. ஆனால் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவதற்குள் பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை. அதன்படி தயார் செய்யப்பட்ட குடிநீர் விநியோக உபவிதிகளுக்கு இறுதி ஒப்புதல் (Final Approval) வழஙக வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ள, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **குடிநீர் விநியோக உபவிதிகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள உபவிதிகளுக்கு இறுதி ஒப்புதல் (Final Approval) வழஙக வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6152/2016/இ2)**

**தீர்மான எண், நாள்** **692, நாள்.10.09.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.05**

இந்நகராட்சியின் குடிநீர்ப் பிரிவின் செலவு, வரவினைக் காட்டிலும் மிகவும் கூடுதலாக உள்ளதாகவும், குடிநீர்க் கட்டணம் கடைசியாக திருத்தியமைக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதாலும், குடிநீர் கட்டணத்தினை மாற்றியமைத்து, பற்றாக்குறையினை ஓரளவு நிவர்த்தி செய்யும் பொருட்டு, குடிநீர் விநியோக உபவிதிகளை புதிதாக தயார் செய்து, அதில் குடிநீர் கட்டணஙகளை மாற்றியமைத்து, மேற்படி உபவிதிகளுக்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அலுவலக தலைமைப் பொறியாளர் அவர்களின் 30.04.2019 ஆம் நாளிட்ட ந.க.12404/2017/குவ2 எண் செயல்முறைகளில் பொது அங்கீகாரம் (General Approval) சில நிபந்தனைகளுக்குட்பட்டு பெறப்பட்டது. அதில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி, மேற்படி குடிநீர் கட்டணத்தினை திருத்தி அமைத்த விவரத்தினை தமிழ் மற்றும் ஆஙகில நாளிதழ்களில் விளம்பரம் செய்து, பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெற அறிவுறுத்தியமைக்கிணஙக, தேனி செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் அவர்கள் வழியாக ஏதாவது ஒரு தமிழ் மற்றும் ஆஙகில நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட வேண்டியதைத் தொடர்ந்து பட்டியல் எண்.19200027 நாள்.22.08.2019ன்படி trinity Mirror ஆஙகில நாளிதழிலும் மற்றும் பட்டியல் எண்.7250, நாள்.22.08.2019ன்படி, தமிழ் தினபூமி நாளிதழிலும் வெளியிடப்பட்டு கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை வழஙக வேண்டப்பட்டுள்ளது.

1. Trinity Mirror - ரூ.11844/–
2. தினபூமி – ரூ.10856/–

   மொத்தம் – ரூ.22700/–

மேற்கண்ட விவரப்படி தொகையினை சம்மந்தப்பட்ட விளம்பர நிறுவனஙகளின் டிரினிடி பிரிண்டர்ஸ் & பப்ளிசர்ஸ் லிமிடெட், சென்னை மற்றும் பிரைட் அட்வர்டைசிங நிறுவனம் சென்னைக்கும் வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மேற்படி விளம்பரஙகள் குடிநீர் உபவிதிகள் திருத்தப்பணியின் நிமித்தம், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், மேற்படி தொகை ரூ.22700/–யை சம்மந்தப்பட்ட விளம்பர நிறுவனஙகளுக்கு வழஙக அனுமதிக்கலாம். (ந.க.எண்.6152/2016/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **693, நாள்.10.09.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.06**

01.01.2020 ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் பணியினை 30.09.2019 ஆம் தேதிக்குள் முடிக்க 30.08.2019 ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வாக்காளர் பட்டியலில் உள்ள ஒவ்வொரு வாக்காளரின் விவரத்தினை சரிபார்க்க வீடு வீடாகச் சென்று விவரத்தினை சேகரிக்க EVP Check List படிவம் தேவைப்படுகிறது. மேலும் 01.09.2019 ஆம் தேதி முதல் 30.09.2019 ஆம் தேதிக்குள் அனைத்து வாக்காளர்களின் விவரத்தினை சரி பார்த்து தொடர்புடைய இணைய தளத்தின் வாயிலாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி 37500 படிவஙகளை உள்ளூர் அச்சகத்தில் அச்சிடப்பட்ட வகையில் ஆன செலவினம் ரூ.33750/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி தொகை செலவிடப்பட்டுள்ளதை தேர்தல் பிரிவு எழுத்தர் அவர்களுக்கு வழஙகுவதற்கு மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3403/2019/எப்1)** |
| **தீர்மான எண், நாள்** | **694, நாள்.10.09.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.07**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2015—2016 மற்றும் 2016—2017ம் நிதியாண்டுகளில் நடைபெற்ற திட்டப்பணிகளை பிரசுரம் செய்தமைக்கு துப்பறியும் விசாரணை மாத இதழ், பாண்டிச்சேரி அவர்களுக்கு தொகை ரூ.9800/— மற்றும் கிங் மேக்கர், பாண்டிச்சேரி அவர்களுக்கு தொகை ரூ.9800/— வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0248/2019/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **695, நாள்.10.09.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.08**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயஙகி வரும் TN60T4228 என்ற டம்பர் பிளேசர் வாகனத்திற்கு 2019—2020 ஆம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் பிரிமியத் தொகை ரூ.43396/—ஐ தேனி யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருநது மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **696, நாள்.10.09.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.09**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான நவீன எரிவாயு தகனமேடையினை பராமரிப்பு பணிகள் சின்னமனூர் ரோட்டரி சங்கம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்பொழுது 12.06.2019ம் தேதிய ரோட்டரி சங்கம் கடிதத்தின்படி நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலாது என தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நவீன எரிவாயு தகனமேடையினை LPG Gas System நிறுவியுள்ள M/s.SGS Engineering, சென்னை அவர்கள் பராமரிப்பு பணிகள் செய்து தருவதாக 19.08.2019ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதுடன் 6 மாத காலத்திற்குள் உத்திரவாதம் கொடுத்து பணியினை முடித்துள்ளார்கள்.

எனவே சின்னமனூர் ரோட்டரி சங்கம் எரிவாயு தகனமேடையினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலாது என தெரிவித்துள்ளதால் அதனை ரத்து செய்து M/s.SGS Engineering, சென்னை அவர்கள் கொடுத்துள்ள விலைப்புள்ளிகளுடன் கூடிய இசைவு கடிதத்தின்படி பொது மக்களின் அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டு ஒரு சடலத்திற்கு எரியூட்ட ரூ.4500/– கட்டணம் வசூல் செய்திடவும் எரிவாயு தகனமேடையின் பராமரிப்புப் பணியினை நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ள ஒப்படைப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **பொது மக்களின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2551/2012/இ1)**

**தீர்மான எண், நாள்** **697, நாள்.10.09.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சியின் குடிநிர் விநியோக பணியின் போது ஏற்படும் உடைப்புகளை சரி செய்வதற்கும், புதிய பைப்கள் மற்றும் பைப் உபகரணங்கள் வாஙகுவதற்கும், 17.07.2019ம் தேதிய வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், முத்துலாபுரம் | ரூ.438584/– |
| 2. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.440632/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1. வரிசை எண்.1ல் காணும் திரு.ஆர்.பரமானந்தன் அவர்கள் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1962/2019/இ2)**

**தீர்மான எண், நாள்** **698, நாள்.10.09.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN60S9443 என்ற எண்ணுடைய காம்பாக்டார் வாகனத்திற்கு 2019–2020 ஆம் ஆண்டிற்கான தகுதிச் சான்று பெறும் பொருட்டு மேற்கண்ட வாகனத்திற்கு சில மராமத்து பணியினை அங்கீகரிக்கப்பட்ட பணிமனையான TVS சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற பணிமனையில் பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.226080/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**

**3. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2865/2019/எச்1).**

**தீர்மான எண், நாள்** **699, நாள்.10.09.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், பாதாள சாக்கடைத் திட்டப் பணிக்கான 1200க்கு மேற்பட்ட புதை சாக்கடை திறப்பு வாய் (Manhole)–கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் குழாய்கள் (Sewer Line) சுமார் 32.123 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்திற்காக அமைக்கப்பட்டுள்ள புதை சாக்கடை திறப்பு வாய் மற்றும் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்கம் செய்யும் பணிக்கு ஜனவரி 2018 முதல் மார்ச் 2019 முடிய உள்ள காலத்திற்கு ஆகும் செலவினத்திற்கு ரூ.9.50 இலட்சத்திற்கு, இந்நகர் மன்றத்தின் 28.12.2017 ஆம் நாளிட்ட 285–ம் எண் தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டது. அதன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகையில் மார்ச் 2019 வரை ரூ.3.70 இலட்சம் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையினை மார்ச் 2020 முடிய உள்ள காலம் வரை செலவு செய்து கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **700, நாள்.10.09.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சியின் சாமிகுளம் 1வது தெரு, சேக்மைதீன் தெரு, தெற்கு தெரு, தெற்கு முஸ்லீம் தெரு, காளவாசல் தெரு, வெள்ளையன் தெரு மற்றும் பட்டாளம்மன் கோவில் தெரு போன்ற பகுதிகளில் மின் மோட்டார் ஸ்டார்ட்டர்கள் 7 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு 13.02.2019ம் தேதிய வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், முத்துலாபுரம் | ரூ.43120/– |
| 2. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.43904/– |

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியதை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.6130/2016/இ2)

**தீர்மான எண், நாள்** 701, நாள்.10.09.2019
**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பம்ப் அறையில் உள்ள 200MM சுலீஸ் வால்வு ஸ்பின்டில்ராடு மறை தேய்மானம் மற்றும் செக்நட்டில் பிராஸ் வெல்டிங் செய்து புதிய மறை கடைசல் செய்யவும், மேலும் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 250MM சுலீஸ் வால்வு ஸ்பின்டில்ராடு மறை தேய்மானம் சரி செய்து செக்நட்டில் பிராஸ் வெல்டிங் செய்யவும் மற்றும் சீப்பாலக்கோட்டை ரோட்டில் உள்ள தண்ணீர் தொட்டி நிலையத்தில் 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இன்லெட் வால்வு 150MM சுலீஸ் வால்வு ஸ்பின்டில்ராடு மற்றும் செக்நட் பிரஸ் வெல்டிங் செய்து புதிய மறை கடைசல் செய்யும் பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிகளை குடிநீர்ப் பணியின் அவசர அவசியம் கருதி 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15இன் கீழ் மேற்கொண்ட வகையில் ஆன செலவு ரூ.12950/–க்கு மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– பதிவு செய்யலாம்.

**தீர்மான எண், நாள்** 702, நாள்.10.09.2019
**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.15**

பொது சுகாதார பிரிவு வாகன எண்.TN60S9443க்கு (காம்பாக்டர்) 6 எண்ணம் டயர்கள் வாங்கும் பணிக்கு 05.08.2019 அன்று விலைப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டதில் கீழ்கண்ட விவரப்படியான விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. ஆதனை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Haj Tyres,<br>290/17, L.F.Road,<br>Cumbum | 1) 8.25-20S MML-90 – 2x11800<br>2) 8.25-20SIL50 – 4x13575 | -<br>- | 23600<br>54300 |
| | | **Total** | **-** | **77900** |
| 2. | Siva Kesa Tyres,<br>1285, Periakulam Road<br>Theni | 1) 8.25-20S MML-90 – 2x11400<br>2) 8.25-20SIL50 – 4x13375 | -<br>- | 22800<br>53500 |
| | | **Total** | **-** | **76300** |

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி அளித்த M/s Siva Kesa Tyres, Theni என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2377/2019/எச்1)**

**தீர்மான எண், நாள்** **703, நாள்.10.09.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான புதை குழி வடிகால் திட்டம் (பாதாள சாக்கடை திட்டம்) நடைமுறைப்படுத்தப்பட்டு போதிய பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது ஒப்பந்த காலம் முடிவடைய உள்ளதால் நவம்பர் 2019 முதல் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியின் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3815/2019/இ1).**

**தீர்மான எண், நாள்** **704, நாள்.10.09.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.17**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் விநியோகத் தொட்டிகள் (மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் – 3 மற்றும் தரைமட்ட தொட்டிகள் –2) அமைந்துள்ள. மேற்படி குடிநீர் தொட்டிகளை பாதுகாக்கவும் பராமரிப்பு செய்யவும் காவலர் அறை ஒன்று 1962 ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. மேற்படி காவலர் அறை கட்டப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட காரணத்தினால் மிகவும் பழுதடைந்து, பணியாளர்கள் மழைக்காலங்களில் தங்குவதற்கு பயனற்ற நிலையில் உள்ளதால், மேற்படி கட்டிடத்தினை இடித்துவிட்டு, அதே இடத்தில் புதிதாக காவலர் அறை ஒன்று கட்டுவதற்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.5.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியின் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3826/2019/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **705, நாள்.10.09.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.18**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் பொது நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலைப்பணிகள், பாதாள சாக்கடைப் பணிகள் மற்றும் குடிநீர் குழாய் இணைப்புகளுக்காக பல்வேறு இடங்களில் சாலைகள் தோண்டப்பட்டதால், குண்டும் குழியுமாகவும், மேடு பள்ளங்களாகவும் உள்ளன. இதனால் பொது மக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு இடையூறு ஏற்படுவதுடன், அடிக்கடி விபத்துக்கள் நிகழ்வதாக பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. மேலும் நகரின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த மழைநீர் வடிகால்களின் சுவர்கள் உடைநது, சாக்கடைகளில் அடைப்பு ஏற்பட்டுள்ளன. மேற்படி சாலைகள் மற்றும் சாக்கடைகளை சரி செய்யவும் அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.6.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியின் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3827/2019/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **706, நாள்.10.09.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.19**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, சந்தைத் தெரு மற்றும் அதன் உட்புறம், சித்தன் கோவில் அருகில் மற்றும் சொக்கநாதபுரம் போன்ற பகுதிகளில் பாதாள சாக்கடை பைப்லைன்களில் அடைப்பு ஏற்பட்டுள்ளதுடன், மேற்படி குழாய்கள் உடைந்து பாதாள சாக்கடை நீர் சாலைகளில் வழிந்தோடுவதால் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே மேற்படி குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்யவும் புதிய குழாய்கள் பொருத்தவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.3.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியின் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3828/2019/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **707, நாள்.10.09.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.20**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, சாமிகுளம் மேல்நிலைத் தொட்டி அருகில் சமூக விரோதிகளால் சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள் நடைபெறுவதாகவும், அதனை தடுக்க வேண்டி, பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால், அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு, சாமிகுளம் மேல்நிலைத் தொட்டி அருகில் சிறிய காவலர் அறை ஒன்று கட்டுவதற்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.2.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கும், மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியின் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3829/2019/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **708, நாள்.10.09.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.21**

சின்னமனூர் நகராட்சியின் புதிய அலுவலகக் கட்டிடத்தின் முன்புறம் கட்டப்பட்டுள்ள சுற்றுச் சுவர்கள் தற்போது மிகவும் தாழ்வாக உள்ளதால், சந்தை வழியாக சமூக விரோதிகள் அலுவலகத்தினுள்புகுந்து பொருட்களை திருடிச் சென்ற வண்ணம் உள்ளனர். அலுவலகத்திற்கும், அதனுள் உள்ள உபகரணங்களுக்கும், பாதுகாப்பற்ற நிலை உள்ளதால், அலுவலகத்தின் முன் உள்ள சுற்றுச் சுவர்களை உயர்த்தி கட்டவும், ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு கூரை (Waiting Shed) அமைக்கவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.9.90 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய்** |

மற்றும் மூலதன நிதியின் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3830/2019/இ1).

தீர்மான எண், நாள் 709, நாள்.10.09.2019
தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.22**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப்பணியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் Head works, Filter Bed, Tank Operator மற்றும் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்ய, போன்ற பணிகளை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது அக்டோபர் மாதம் 2019 முடிய மதிப்பீட்டு தொகை முடிவடைவதால், நவம்பர் 2019 முதல் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் (மற்றும்) வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் செலவினத் தொகைக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1450/12/இ2)

தீர்மான எண், நாள் 710, நாள்.10.09.2019
தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.23**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளை GIS-Shape File Format-இல் வரைந்து அவ்விவரத்தினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளதால் வார்டு வாரியாக வரைபடம் வரைவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.80000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0775/2019/எப்1)

தீர்மான எண், நாள் 711, நாள்.10.09.2019
தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.24

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு –A, பிளாக்–3, நகரளவு எண்.9/23, 9/24 மற்றும் 10/27 கட்டுப்பட்ட 2.35 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வேண்டி திரு.கே.அழகர்ராஜா என்பவர் விண்ணப்பத்திருந்தார். விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க தொழில்நுட்ப ஒப்புதல் வேண்டி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1200/2019/எப்1, நாள்.16.04.2019ன்படி பரிந்துரை செய்ததில், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.2214/2019/மம3, நாள்.09.08.2019ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மனுதாரரால் சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் மூலம் மேதகு ஆளுநர் அவர்களுக்கு பத்திர பதிவு ஆவண எண்.4281/2019ன்படி உத்தேச சாலை, பூங்கா (உள்ளாட்சிக்கு) உள்ளாட்சி உபயோக இடம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உபயோக இடம் போன்ற பொது ஒதுக்கீடாக உரிய இடமானது தானமாக கொடுக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. தானமாக கொடுத்துள்ள இடத்தினை மன்றம் ஏற்கலாம்.<br>2. மனுதாரரால் உரிய சாலை மற்றும் சாலைகள் இரண்டு பக்கங்களிலும் வடிகால் போன்றவை அமைத்து பணிகள் முடிக்கப்பட்டவுடன் இறுதி ஒப்புதல் கோரி பரிந்துரை செய்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1200/2019/எப்1). |
| தீர்மான எண், நாள் | 712, நாள்.10.09.2019 |
| தீர்மானம் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

## பொருள் எண்.25

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.09, கதவு எண்.104A, மெயின் ரோட்டில் உள்ள நமது நகராட்சி IDSMT கடை எண்.01க்கு சொத்துவரி ரூ.805/– உள்ளது. மேற்படி சொத்துவரியை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 86(a) ன்படி விலக்கு அளிக்கும் பொருட்டு (Tax Exempt) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. சொத்துவரி கேட்பு பதிவேட்டில் 2019–2020க்கான கேட்பினை நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம். |
| தீர்மான எண், நாள் | 713, நாள்.10.09.2019 |
| தீர்மானம் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******